அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கல்.

* 636 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், நெல்வாய் அரிசனக் காலனி மக்களுக்கு குழாய்க் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் மேலும் கால தாமதம் ஏன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) & (இ) வரட்சி நிவாரண திட்டத்தின்கீழ் கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் நெல்வாய் அரிசனக் காலனி மக்களுக்கு குழாய் குடிநீர் வசதி அளிக்கும் பணி 24—2—1975 அன்று மேற்படி ஒன்றிய ஆணையாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

* 637 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காக்கவாக்கம் அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காக்கவாக்கம் அரிசனக் காலனியில் குடிநீர் வசதி செய்ய திட்டம் எதுவுமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த அரிசனக் காலனியில் இப்பொழுது வறட்சி நிவாரணத்தில் "போர்வெல்" மட்டும் போட்டிருக்கிறுர்கள். இங்கே மேல்நிலைக் குடிநீர்த் திட்டத்தை எற்படுத்த அரிசன நல இலாக்காவில் நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, 1975–76-இல் அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, இந்தக் கேள்விக்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளர் நேரில் சென்று, பார்த்து திட்டங்களைத் தயாரித்து வருகிறுர்கள்.